பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

09 09 2024 **MONDAY** 7 15 **AM**

வணக்கம், ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா – ஐக்கிய அரபு அமிரகம் இடையிலான ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்தும் விதத்தில் புதுதில்லியில் இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

2. இந்தியா – வளைகுடா நாடுகளின் கூட்டமைப்பு குழும வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று உரையாற்றுகிறார்.

3. அதிநவீன தொழில்நுட்ப சாதனங்களை தயாரிக்க பயன்படுத்தப்படும் செமிகண்டக்டர் துறையில் உலக அளவில் இந்தியாவின் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் செமிகான் இண்டியா 2024 மாநாடு புதன்கிழமை நொய்டாவில் நடைபெறவுள்ளது.

4. இந்தியாவில் அந்நிய முதலீடு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. செப்டம்பர் முதல் வாரத்தில் மட்டும் 11 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன

5. ஐக்கிய அரபு அமிரகத்தில் நடைபெற்ற ஆசிய சப்-ஜூனியர் குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் தீபாலி தாபா வெற்றிபெற்று சாதனை படைத்துள்ளார்.

>>>>><<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடியை, இந்தியாவிற்கு வருகை தந்துள்ள அபுதாபி இளவரசர் **Sheikh Khaled Bin Mohammed Bin Zayed Al Nahyan** புதுதில்லியில் இன்று சந்தித்து உரையாடுகிறார்.

இரு நாடுகளுக்கு இடையேயான உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் விவாதிக்கவுள்ளனர்.

அபுதாபியின் இளவரசராக பதவியேற்ற பின் முதல்முறையாக அவர் இந்தியா வந்துள்ளார்.

அவருடன் ஐக்கிய அரபு அமிரக அரசின் அமைச்சர்கள் மற்றும் வர்த்தக பிரதிநிதிகள், தொழிலதிபர்கள் வந்துள்ளனர்.

நாளை மும்பையில் தொழில்துறையினர் ஏற்பாடு செய்துள்ள கூட்டத்தில் அபுதாபி இளவரசர் கலந்து கொண்டு உரையாற்றுகிறார்.

இந்தியா – ஐக்கிய அரபு அமிரகம் இடையேயான வர்த்தக மதிப்பு 85 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.

இந்தியாவுடனான மூன்றாவது பெரிய வர்த்தக உறவு கொண்டுள்ள நாடாக ஐக்கிய அரபு அமிரகம் திகழ்கிறது.

>>>>><<<<

சரக்கு மற்றும் சேவை வரி குழுமத்தின் 54வது கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

இந்தக் கூட்டம், மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இன்றைய கூட்டத்தில், காப்பீட்டுத் தொகை மீதான வரிவிதிப்பு, ஆன்லைன் விளையாட்டுக்கள் ஆகியவை மீதான சரக்கு சேவை வரி குறித்து விவாதிக்கப்படும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<

இந்தியா – வளைகுடா நாடுகளின் கூட்டமைப்பு குழும வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று உரையாற்றுகிறார்.

ரியாதில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில், இந்தியா – வளைகுடா நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்புகள் குறித்து விவதிக்கப்படுகிறது.

வர்த்தகம், முதலீடு, எரிசக்தி ஆகியவற்றில் வளைகுடா நாடுகள் மற்றும் இந்தியாவிற்கு இடையேயான ஒத்துழைப்புகள் குறித்தும் கலந்து ஆலோசிக்கப்படுகிறது.

வளைகுடா நாடுகளில் சுமார் 90 லட்சம் இந்தியர்கள் வாழ்ந்து வரும் நிலையில், இந்தியா – வளைகுடா நாடுகளுக்கு இடையிலான வெளியுறவு கொள்கைகள் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்படுகிறது.

>>>>><<<<

அதிநவீன தொழில்நுட்ப சாதனங்களை தயாரிக்க பயன்படுத்தப்படும் செமிகண்டக்டர் துறையில் உலக அளவில் இந்தியாவின் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் செமிகான் இண்டியா 2024 மாநாடு புதன்கிழமை நொய்டாவில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டை பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடங்கி வைக்கிறார்.

உத்தரபிரதேச மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் இதில் கலந்து கொள்கிறார்.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில், செமிகண்டக்டர் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து, கண்காட்சி மற்றும் கருத்தரங்குகள் நடைபெறுகின்றன.

**Semi Messe Muenchen India** மற்றும் இந்திய மின்னணு தொழில்துறை கூட்டமைப்பு ஆகியவை இணைந்து இந்த மாநாட்டை நடத்துகிறது.

தெற்காசியாவில் மிகப் பெரிய கண்காட்சியாக நடைபெறும் மின்னணு கண்காட்சியுடன், இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

இது இந்தியா மற்றும் சர்வதேச நாடுகளைச் சேர்ந்த செமிகண்டக்டர் துறையில் முன்னணி வகிக்கும் நிறுவனங்கள் பங்கேற்கின்றன.

செமிகண்டக்டர் துறையில் இளைஞர்களுக்கு அதிக அளவில் வேலை கிடைப்பதற்கு வாய்ப்புள்ளதாக மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் செயலாளர் திரு. எஸ். கிருஷ்ணன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - கிருஷ்ணன் 48 செகண்ட்ஸ்)

**>>>>><<<<**

இந்தியாவில் அந்நிய முதலீடு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

செப்டம்பர் முதல் வாரத்தில் மட்டும் 11 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக, 10 ஆயிரத்து 978 கோடி ரூபாய், பங்குச்சந்தையிலும், 367 கோடி ரூபாய் கடன் சந்தையிலும் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த மாதம் இதுவரை 11 ஆயிரத்து 345 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளதாகவும், கடந்த 3 மாதங்களாக தொடர்ந்து அந்நிய முதலீடு அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு, இந்திய சந்தையில் ஒரு லட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடம் மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி இம்மாதம் 29ஆம் தேதி காலை 11 மணிக்கு அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பாகவுள்ளது.

இது, 114வது நிகழ்ச்சியாகும்.

பொதுமக்கள் தங்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் 1800 117800 என்ற கட்டணமில்லா தொலைபேசி வழியாகவோ, 1922 என்ற எண்ணிற்கு மிஸ்டுகால் தருவதன் மூலமாகவோ தெரிவிக்கலாம்.

மேலும், நமோ செயலி மற்றும் **mygov** என்ற செயலி வாயிலாகவும் தங்களது எண்ணங்களை பதிவு செய்யலாம்.

>>>>><<<<

குரங்கு அம்மை நோயால் ஒரு இளைஞர் பாதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இவர் சமீபத்தில் வெளிநாடு சென்று இந்தியாவிற்கு திரும்பியுள்ள நிலையில் அவரிடம் குரங்கு அம்மை நோய்க்கான அறிகுறிகள் காணப்பட்டதாகவும், பரிசோதனைக்குப் பின்னர் குரங்கு அம்மை நோய் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ள நபரின் உடல்நிலை சீராக உள்ளதாகவும், அவருடன் தொடர்பில் இருந்தவர்கள் குறித்த தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

இந்த நோயால் பாதிக்கப்படும் நபர்களை தனிமைப்படுத்தி, சிகிச்சை அளிப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த நோய் அதிக அளவில் பரவாமல் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

**>>>>><<<<**

உத்தரபிரதேச மாநிலம், ஆக்ராவில் **Chiintan Shivir** என்ற இரண்டு நாள் தேசிய மறுசீராய்வு மாநாட்டை, சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் நடத்துகிறது.

இந்த மாநாடு அத்துறைக்கான அமைச்சர் திரு. வீரேந்திரகுமார் தலைமையில் இன்றும், நாளையும் நடைபெறுகிறது.

மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களில் சமூகநீதி மற்றும் சமூகநலத்துறை அமைச்சர்கள், மூத்த அதிகாரிகள் இம்மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

சமூகத்தில் பின்தங்கிய மக்களுக்கான பல்வேறு திட்டங்கள் மற்றும் கொள்கைகளை செயல்படுத்துவதற்கான விவாதங்கள் இதில் நடைபெறவுள்ளன.

மாநில அளவில் சமூகநீதி திட்டங்களில் வளர்ச்சி மற்றும் செயல்பாடுகள் குறித்தும் இம்மாநாட்டில் விவாதம் நடைபெறுகிறது.

**>>>>><<<<**

தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழகம் முன்னணியில் இருப்பதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சிகாகோவில் நடைபெற்ற அமெரிக்க வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர், தகவல் தொழில்நுட்பத் துறையில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக மறைந்த முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதி, டைடல் பூங்காவை சென்னையில் ஏற்படுத்தியதை நினைவுகூர்ந்தார்.

தமிழர்கள் எங்கு பாதிக்கப்பட்டாலும், தமிழ்நாடு தாய் வீடாக இருக்கிறது என்ற உணர்வை தமது அரசு ஏற்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களுக்காக அயலக தமிழர் நல வாரியத்தை தமது அரசு உருவாக்கியுள்ளதாகவும் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

>>>>><<<<

மணிப்பூரில் ஏற்பட்டுள்ள சட்டம் ஒழுங்கு பிரச்சினை காரணமாக இன்றும் நாளையும் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்படுவதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக அங்கு ஏற்பட்டுள்ள கலவரமான சூழ்நிலை காரணமாக, பள்ளி கல்லூரிகள் மூடப்பட்டுள்ளன.

**Moirang** என்ற இடத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் ஒருவர் உயிரிழந்ததை அடுத்து, பல இடங்களில் கலவரம் ஏற்பட்டுள்ளது.

இதனிடையே, நேற்று அம்மாநில முதலமைச்சர் திரு. பைரன்சிங் தலைமையில் சட்டப்பேரவை உறுப்பினர்கள் அம்மாநில ஆளுநர் திரு. லக்ஷ்மன் பிரசாத் ஆச்சாரியாவை சந்தித்து, 8 அம்ச கோரிக்கைகள் அடங்கிய மனுவை சமர்ப்பித்தனர்.

இந்த மனுவில், மாநிலத்தில் அமைதியை ஏற்படுத்துவதற்கு மத்திய அரசு முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த கலவரங்களை ஒடுக்குவதற்கு தேவையான அதிகாரங்களை மாநில அரசுக்கு வழங்க வேண்டும் என்றும் இந்தியா-மியான்மர் எல்லைப்பகுதியில் தடுப்பு சுவர்கள் அமைக்கும் பணியை துரிதப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

>>>>><<<<

ஐக்கிய அரபு அமிரகத்தில் நடைபெற்ற ஆசிய சப்-ஜூனியர் குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் தீபாலி தாபா வெற்றிபெற்று சாதனை படைத்துள்ளார்.

இப்போட்டியில் 33 கிலோ எடைப்பிரிவில் யுக்ரைன் நாட்டின் **Liudmyla-**வை வென்றார்.

35 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் **Bhoomi,** கஜகஸ்தானின் **Assel Jalimbekova-**வை வென்றார்.

>>>>><<<<

பாரிஸில் நடைபெற்ற பாராலிம்பிக் போட்டிகள் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் நிறைவு பெற்றன.

கனமழை பெய்த போதும், எந்தவித தடையும் இல்லாமல் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்தப் போட்டிகளில் 168 நாடுகளைச் சேர்ந்த 4 ஆயிரத்து 400 வீரர் வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

பிரான்ஸ் நாட்டின் 76 வயதான இசைக்கலைஞர் **Jean Michel Jarre-**ன் இசை நிகழ்ச்சி அனைவரையும் கவர்ந்தது.

அடுத்த பாராலிம்பிக் போட்டிகள் 2028ஆம் ஆண்டு, லாஸ்ஏஞ்சல்ஸில் நடைபெறவுள்ளது. பாரிஸ் நகர மேயர் **Anne Hidalgo** பாராலிம்பிக் கொடியை, லாஸ்ஏஞ்சல்ஸ் நகர மேயர் **Karen Bass-**யிடம் ஒப்படைத்தார்.

இப்போட்டியில் இந்திய அணியினர் 7 தங்கம், 9 வெள்ளி, 13 வெண்கலப்பதக்கங்கள் என மொத்தம் 29 பதக்கங்களை வென்றுள்ளனர்.

>>>>><<<<